**ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா)**

**Corpus Christi)**

**விவிலிய வாசகங்கள்**

உபாகமம் 8:2-3, 14-16; 1 கொரிந்தியர் 10:16-17;  யோவான் 6:51-58

**திருப்பலி முன்னுரை**

ஒரு சிறுவன் தனது பெற்றோருடன் ஒரு பெரிய ஷாப்பிங் மாலுக்கு சென்றான். அங்கு அவன் எங்கு பார்த்தாலும் பிரகாசமான விளக்குகள், வண்ணமயமான பொருட்கள், பலவிதமான உணவுப் பொருட்களை கண்டு ரசித்தான்

அவன் தன் பெற்றோரிடம் தொடர்ந்து இனிப்புகளையும் பானங்களையும் கேட்டு அடம் பிடித்தான் பெற்றோரும் அவன் கேட்டவற்றை எல்லாம் வாங்கி கொடுத்தனர். ஆனால் சில மணி நேரத்திற்குப் பிறகு அவன் அமைதியிழந்து திருப்தியின்றி இருந்தான்.

இறுதியில், அவன் தாய் அவனை அமரச் செய்து, ஒரு எளிய விலை குறைவான சாண்ட்விச்சை ஒன்றை வாங்கி கொடுத்து, "இதுதான் உனக்கு இப்போது உண்மையில் தேவையானது" என்றாள். அதை வாங்கி உண்டபின் அவன் உண்மையான திருப்தியை உணர்ந்தான்.

இதுபோலவே, நாமும் நமது வாழ்க்கையை வேலை, வெற்றி, சொத்து, இன்பம் போன்ற பலவற்றால் நிரப்ப முயல்கிறோம். ஆனாலும், நம் உள்ளத்தின் ஆழத்தில் ஒரு இனம் புரியாத பசி எப்போதும் இருக்கிறது

அதை மேற் சொன்ன எதுவும் நிறைவு செய்ய முடியாது.

இன்று, இந்த மாபெரும் திருவிழாவில், அந்த ஆழமான பசி உண்மையானது என்பதை நினைவூட்டுகிறது. அதனை நிறைவு செய்ய இயேசு தாமே நம்மை தேடி வருகிறார். அவர் தம்மையே "உயிர் தரும் அப்பமாக நமக்குத் தருகிறார்.

இந்த திருப்பலியை கொண்டாட நாம் கூடும் இந்நேரத்தில், நமது உள்ளத்தின் ஆன்ம பசியையும், தேவையையும் உணர்வோம். இறைவனை தவிர்த்துவிட்டு நாம் எவ்வாறு வாழ்ந்திருக்கிறோம் என்பதை சிந்திப்போம். இப்போது அவருடைய இரக்கத்தையும் மன்னிப்பையும் வேண்டி மன்றாடுவோம்

**திருப்பலிக்கான மறையுறை**

"உயிரின் அப்பமான கிறிஸ்து – நமது ஆழ்ந்த ஆன்மீக பசியை நிறைவு செய்து, நம்மை அன்பில் ஒன்றாக்குறார்.

ஒரு இளைஞன் வாழ்க்கையில் வெற்றியைத் தேடி

அலைந்து பல ஆண்டுகள் உழைத்தான். நல்ல கல்வி, நல்ல வேலை, அதிக வருமானம், பல நாடுகளுக்கு பயணங்கள் மேற்கொண்டான் அவனுக்கு எல்லாம் இருந்தது.

ஒருநாள் இரவு, அவன் தனது அழகான வீட்டில் தனியாக அமர்ந்தபோது, அவன் உள்ளத்தில் ஒரு வெறுமை தோன்றியது.

"இதுவே எல்லாமா? ஏன் இன்னும் உள்ளத்தில் பசி என்ற தேடுதல் வேட்கை இருக்கிறது?" என்று அவன் தனக்குள்ளே கேட்டு கொண்டான்.

இந்த கேள்வி அவனுடைய உள்ளத்தில் எழுந்த கேள்வி மட்டுமல்ல ஒவ்வொரு மனிதரின் உள்ளத்திலும் எழும் கேள்விதான்.

அன்பான சகோதர சகோதரிகளே, இன்றைய திருவிழா நமது உள்ளத்தில

மறைவாக உள்ள அந்த ஆன்மீக பசியைப் பற்றிப் பேசுகிறது.

அது உணவுக்கான பசி அல்ல

அது அன்புக்கான, நிம்மதிக்கான இறைவனை தேடுவதற்கான ஆன்மீக பசி.

ஒரு திரைப்படத்தில் வரும் ஒரு அழகான காட்சி

ஒரு சமையல்காரி தனக்கு சொந்தமான அனைத்தையும் செலவழித்து தனது ஊரின் மக்களுக்காக ஒரு சிறந்த விருந்தை தயார் செய்கிறாள். அந்த விருந்தோம்பலின் மூலம் மக்கள் மனங்கள் திறக்கப்படுகின்றன, பழைய மனக் காயங்கள் குணமாகின்றன, மகிழ்ச்சி திரும்புகிறது. அது மக்கள் உணவு உண்டதின் காரணமாக ஏற்பட்டது அல்ல அந்த மகிழ்ச்சி மாறாக உணவில் ஊற்றப்பட்ட சுயநலமில்லா அன்பினால்தான் அந்த மகிழ்ச்சி ஏற்பட்டது

அதேபோல தான் திருப்பலியும் அது வெறும் அப்பமும் திராட்சரசமும் அல்ல மாறாக அன்பு, அர்ப்பணம், நிறைந்த ஒரு திரு நிகழ்வு

கிறிஸ்துவின் வாழ்க்கையில் அவர் அப்பங்களை பெருகச் செய்தபோது, மக்கள் இயேசுவை அரசராக்க விரும்பினரார்கள் ஆனால் அவர் அதைத் தவிர்த்தார். அவர் மனித குலத்தின் வெறும் உடல் பசியை தீர்க்க வரவில்லை; அவர் மனித குலத்தின் ஆன்மாவின் பசியை தீர்க்க வந்தார்.

நாம் வாழும் உலகில் பல விஷயங்களை நாடி ஓடுகிறோம்

அவைகளில் வெற்றி, மகிழ்ச்சி, அனுபவம். போன்றவை தற்காலிக மகிழ்ச்சியை தருகிறது ஆனால் அது மட்டுமே போதாது.

இனிப்புகள் மட்டும் சாப்பிடும் குழந்தையைப் போல, நாமும் உண்மையான உணவைத் தேடாமல் தவிக்கிறோம்.

இயேசு சொல்கிறார்: "நானே உயிருள்ள அப்பம்."என்றாரே தவிர நான் அப்பம் தருகிறேன்" என்று ஒரு போதும் சொல்லவில்லை; "நானே அப்பம்" என்ற சொல்லாடல் வெறும் வார்த்தை மட்டுமே அல்ல

திருப்பலியில் இது உண்மையாகிறது. கடைசி திருவிருந்துன்போது இயேசு "இது என் உடல்… இது என் இரத்தம்" என்று தம்மையே நமக்கு கொடுத்தார்.

இன்றும் கூட பலரின் வாழ்க்கையில் பசி இல்லாமல் வயிறு நிறைந்திருந்தாலும், உள்ளம் வெறுமையாக இருக்கிறது.

ஒரு குரு சில இளைஞர்களிடம் கேட்டார் "உங்களுக்கு உண்மையில் என்ன விதமான பசி?"ஏற்பட்டுள்ளது அவர்கள் சொன்னார்கள்

நாங்கல ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் வேண்டும்மாறாத அன்பு வேண்டும்.

இதுவே மனித உள்ளத்தின் மாறாத உண்மையான பசி.

ஒரு விவரம் தெரிந்த சிறுவன் தன் முதல் திருப்பலியில் இயேசுவை அப்ப வடிவில் பெற்றபின் கேட்டார்கள்: "ஏன் உனக்கு இவ்வளவு சந்தோஷம்?"அவன் சொன்னான்: "இயேசு என்னிடம் வந்தார்."அதுவே என் மகிழ்ச்சிக்கு காரணம்

இதுவே திருப்பலியின் மையம் கருத்து

நாம் அவரிடம் போவதல்ல; அவர் நம்மிடம் வருகிறார்.

நாம் அவரை ஏற்றுக்கொள்ளும்போது, நாம் அவருடன் ஒன்றாகிறோம்; ஒருவருடன் ஒருவர் ஒன்றாகிறோம்

திருத்தூதர் பவுல் சொல்வது போல

"ஒரே அப்பத்தைப் பகிர்ந்ததால், நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம்."

ஒரு குடும்ப உணவு தயாரிக்கும் இடத்தை நினைத்துப் பாருங்கள். அங்கே அனைவரும் பூரணமானவர்கள் அல்ல

ஆனால் அவர்கள் ஒரு குடும்பம். அதுபோலத்தான் திருப்பலி நிறைவேற்றும்

மேசை  - அது ஆண்டவரின் மேசை.

திருப்பலி நம்மை அனைத்து விதங்களிலும் மாற அழைக்கிறது.

புனித அகஸ்தினார் சொல்கிறார் “நீங்கள் பெறுவது என்னவோ, அதுவாக மாறுங்கள்.”

அதாவது, நாம் கிறிஸ்துவைப் பெறுகிறோம்–அவரைப்போல மாற வேண்டும் வாழ வேண்டும்.

மேலும், இது ஒரு நினைவூட்டலும் ஆகும்.“ஏனெனில் என்னை நினைவுகூர்ந்து இதைச் செய்யுங்கள்”   என்று இயேசு சொன்னார்.இந்த நினைவு கடந்தகாலத்தை மட்டும் குறிப்பது அல்ல இப்போதும் நிகழும் நிகழ்காலத்தையும்  தான் .

பல இடங்களில் இயேசுவின் திருஉடல் திருஇரத்த பெரு திருவிழாவில் ஊர்வலம் நடத்தப்படுகிறது. அது ஒரு குறியீடுதான் .

இயேசு நம் வாழ்க்கையிலும் நம்மோடு நடக்கிறார் என்பதை உணர வேண்டும்

ஒரு முதியவர் எப்போதும் கிருஸ்துவின் திருஉடல்   திருஇரத்த பெருவிழா ஊர்வலத்தில் பங்கேற்பார்.அவரிடம் சிலர் கேட்டார்கள்: “ஏன்?”எப்போதும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்கிறீகள்

முதியவர் சொன்னார்:“வாரம் முழுவதும் நான் அவரைப் பின்பற்றுகிறேன்; இன்று ஒரு நாளைக்கு மட்டும் அவர் என்னை வழிநடத்துகிறார்

அதுவே நமக்குமான அழைப்பு.

நாம் நமது ஆன்மீக பசியுடன் நமது இனம் புரியாத கேள்விகளுடன் பல இந்த பலிபீடத்திற்கு வருகிறோம்.இங்கே திருப்பலியில் இயேசு தம்மையே நமக்குத் தருகிறார்.

பிறகு அவர் நம்மை ஆசீர்வதித்து வழி அனுப்புகிறார் அன்பில் வாழ,ஒன்றிணைந்து வாழ,பசியான உலகிற்கு வாழ்க்கையைக் கொடுக்க அர்ப்பணிக்க

நாம் திறந்த இதயத்துடன் திருப்பலியில் கலந்து கொள்வோம் முற்றிலும் மாற்றப்பட்டவர்களாய் இல்லம் திரும்புவோம்.

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai